**கீழ்ப் பிரிவு (7 வயது முதல் 9 வயது வரை)**
**மாதிரிக்கேள்விகள்**

1 உங்கள் சமயம் எது?
சைவ சமயம்

2 சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்களை எப்படி அழைப்பீர்கள்?
சைவர்கள் என அழைப்போம்.

3 சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் என்று கொள்ளப்படுபவர் யார்?
சிவபெருமான்.

4 சிவபெருமான் எப்படிப் பட்டவர் என்று சைவ சமயம் கூறுகிறது? 2 விடயம் கூறுக.
சிவபெருமான் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்
அன்பு வடிவானவர் (எல்லா உயிர்களையும் காப்பவர்)
எனச் சைவ சமயம் கூறுகிறது.

5 சிவபெருமானை வேறு எந்தப் பெயர்களினால் அழைப்பீர்கள்? 4 கூறுக.
அமலன் அரன் அந்திவண்ணன் அங்கணன் அங்கணாளன் அமலன் அமுதவேணி
ஆலமுண்டோன் ஆதிநாதன் ஆதிரையான் ஆதிசிவன் இடபக்கொடியோன் ஈசன் ஈசுவரன்
உத்தரன் ஐந்துமுகன் முக்கண்ணன் கங்கைவேணியன் கங்காதரன்

6 சிவபெருமான் தலையில் அணிந்துள்ளவை எவை?
பிறைச் சந்திரன், கங்கை

7 சிவனின் கழுத்தை அலங்கரிப்பது எது?
அரவம் - பாம்பு – நாகபாம்பு

8 சிவராத்திரி எந்த மாதத்தில் வருகிறது?
மாசி மாதத்தில்

9 நாம் கடவுளை வணங்குவதற்குச் செல்லும் இடம் எது?
கோயில்

10 கோயில் இல்லாத ஊரில் ................. என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும்.
கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது அந்தப் பழமொழி.

11 கோயில் திருவிழா ஆரம்பமாகும் முதல் நாள் என்ன விசேடம் (விசேஷம்) நடைபெறும்?
கொடி ஏற்றம் நடைபெறும்.

12 கோயில் வாசலை அலங்கரிப்பது எது?
கோயில் கோபுரம்

13 கோயிலை அடைந்ததும் எதைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்?
கோயில் கோபுரத்தைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்.

14 பிள்ளையாரை எப்படிக் கும்பிடவேண்டும்?
கைவிரல்களை மடக்கி நெற்றியில் மூன்று முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டுக் கும்பிடவேண்டும்.

15 காத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் பெயரைக் கூறவும்.
திருமால்

16 சிவபெருமானின் இடப்பக்கத்தில் இருக்கும் தெய்வத்தின் பெயரைக் கூறுக.
உமாதேவியார்

17 பிள்ளையாருக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறவும்.
கணபதி, விநாயகர், ஐங்கரன் ஆனைமுகன் ஏகதந்தன் கரிமுகன் ஆகீசன் மதகரி ஆகுவாகனன் மதங்கன்

18 கயமுகாசுரனை வதம் செய்த கடவுளின் பெயரைக் கூறவும்.
விநாயகப் பெருமான்.

19 படைத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் பெயரைக் கூறவும்.
பிரம்மா

20 பிரம்மாவிற்கு வேறு பெயர்கள் கூறுக.
நான்முகன், பங்கயன், மலரோன்

21 திருமாலுக்கு வேறு பெயர் 4 கூறுக.
கோவிந்தன், வெங்கடேசுவரர், (வெங்கடேஸ்வரர்) முகுந்தன், முரளீதரன், மதுசூதனன், கடல்வண்ணன், உலகளந்தோன், மாதவன், நாராயணன், கேசவன், சிறீரங்கநாதன், உலகமுண்டோன்.

22 முருகப் பெருமானின் கொடியில் உள்ள பறவை எது?
சேவல்

23 முருகப் பெருமானுக்கு உகந்த விரத நாள்கள் எவை?
கந்தசட்டி (கந்தசஷ்டி) விரத நாள்கள் ஆகும்.

24 முருகப் பெருமானுக்கு வேறு பெயர்கள் 4 கூறுக.
ஆறுமுகன் சேந்தன் சரவணபவன் கார்த்திகேயன் சுப்பிரமணியன் மயில்வாகனன் கந்தன் செவ்வேள் வடிவேலன் கடம்பன் அயிலவன் கலையறிபுலவன் வேலாயுதன்

25 அம்மை அப்பனை – அதாவது – சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொண்ட கடவுள் யார்?
பிள்ளையார்

26 திருஞானசம்பந்த நாயனாருக்கு ஞானப்பால் ஊட்டிய தெய்வத்தின் பெயரைக் கூறுக.
உமை அம்மை

27 திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் எது?
தமிழ் நாட்டில் உள்ள சீர்காழி

28 தேவாரம் பாடிய மூன்று நாயன்மாரின் பெயர்களையும் கூறுக.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரச நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்.

29 திருநீறு எதில் இருந்து செய்யப்படுகிறது?
பசுவின் சாணத்திலிருந்து செய்யப்படுகிறது

30 நவராத்திரி என்பது எதைக் குறிக்கின்றது.
ஒன்பது இரவுகளைக் குறிக்கின்றது

31 கோயில் திருவிழாவில் பெரு விழா எது?
தேர்த் திருவிழா

32 சகலகலாவல்லி மாலையைப் பாடியவரின் பெயரைக் கூறுக.
குமரகுருபர சுவாமிகள்

33 நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாள்களில் எந்த சத்திக்கு விசேட பூசை நடைபெறும்.
துர்க்கை அம்மனுக்கு விசேட பூசை நடைபெறும்.

34 தேவாரம் பாடிய நாயன்மார் மூவரின் பெயரையும் கூறுக.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
திருநாவுக்கரசு நாயனார்
சுந்தரமூர்த்தி நாயனார்

35 சிவபெருமானை நினைந்து விசேடமாகச் சைவர்களால் கொண்டாடப்படும் இரண்டு தினங்கள் கூறுக.
சிவராத்திரி, ஆருத்திரா தரிசனம்

36 திருநீறு - இதற்கு இன்னுமொரு பெயர் கூறுக.
விபூதி

37 சிவபுராணத்தின் முதல் வரியைக் கூறுக.
நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க

38 சிவபுராணத்தை அருளிய நாயனார் யார்?
மாணிக்கவாசக சுவாமிகள்

39 முருகக் கடவுளுக்குரிய விசேட தினம் ஒன்று கூறுக.
கந்தபுராணம்

40 மாசி மகத்தின் சிறப்பு யாது?
துர்க்கை அம்மனுக்கு விசேட தீர்த்தம் - பூசை செய்யப்படும் தினம்

41 சிவசின்னங்கள் எவை?
விபூதி – (திருநீறு) – , சந்தனம், குங்குமம், உருத்திராக்கம்.

42 இந்த உலகத்தையும் அதிலுள்ள உயிரனங்களையும் படைத்தவர் யார்?
கடவுள்

43 ஐங்கரன் என்று அழைக்கப்படுபவர் யார்?
பிள்ளையார்

44 கோயிலை எப்படி வலம் வர வேண்டும்.
இடப் பக்கம் இருந்து வலப்பக்கமாகச் சுற்றி வலம் வர வேண்டும்.

45 கோயிலில் எவற்றைப் பாட வேண்டும்?
தேவாரம், திருவாசகம், தோத்திரப் பாடல்கள் முதலியவற்றைப் பாடவேண்டும்.

46 நெற்றியில் பூசிய பின்பு எஞ்சிய திருநீற்றை என்ன செய்வீர்கள்?
உடம்பில் பூசவேண்டும். கீழே கொட்டாது பத்திரப்படுத்த வேண்டும்.

47 மாணவர்களிடம் இருக்க வேண்டிய நல்ல குணங்கள் 3 கூறுக.
கடவுளைத் தினமும் வழிபடல், எப்பொழுதும் உண்மை பேசுதல், ஒருவரின் உடலுக்கோ மனதிற்கோ துன்பம் விளைவிக்காதிருத்தல், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பெற்றோர் – ஆசிரியர்களின்; சொற்படி கேட்டல்,